**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070420236253

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 14.01.2023

Accepted: 05.03.2023

Published: 01.04.2023

Citation:
Premalatha,
V. "Transgenders Portraying in Tamil Epics." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 4, 2023, pp. 53–58.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6253

*Corresponding Author:
darshansarvesh@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Transgenders Portraying in Tamil Epics

**V. Premalatha**

*Assistant Professor, Department of Tamil Studies*

*Holy Cross Autonomous College, Tiruchirappalli, Tamil Nadu, India*

*https://orcid.org/0009-0001-0708-4089*

**Abstract**

Ever since the beginning of mankind, there has been a race of transgenders like male and female. Even today, they are still struggling to establish themselves in human society, which is regarded as inferior in the eyes of mankind. In Tamil literature, there are many records of transsexuals. In particular, this review examines how records register transgender people.

**Key Words:** Bedi, Transgender, Kagal, Kayal, Epic

**References**

1. Goumareeswari (Ed.). 2013. Source and Text by Nilakasi, Saradha Publishing House, Chennai.
2. Buliurkesikan (Ed.). 2006. Silapathikaram, Chennai, Paristanyam
3. Puliurkesikan (Ed.), 2005. Manimekalai, Chennai, Paristanyam.
4. Manikkavasagan Jn. (Text.). 2007. Source and Text by Sivakasintamani, (Part I), Uma Publishing House, Chennai.

# காப்பியங்கள் சித்திரிக்கும் திருநங்கையர்

**முனைவர் வெ. பிரேமலதா**
*உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை*
*புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி*

***ஆய்வுச்சுருக்கம்***
*மனிதகுலம் தோன்றிய காலத்திலிருந்தே ஆணினம், பெண்ணினம், போல திருநங்கையர் என்றொரு இனமும் தோன்றியிருக்கின்றது. மானிடத்தின் பார்வையில் ஈனப்பிறப்பாகக் கருதப்படும், மனித சமுதாயத்தில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள இன்றளவும் போராடிக்கொண்டே இருக்கின்றனர். தமிழ் இலக்கியங்களில் திருநங்கையர் பற்றிய பதிவுகள் அதிகமாகக் காணப்படுகின்றது. குறிப்பாகக் காப்பியங்கள் திருநங்கையரை எவ்வாறு பதிவு செய்கின்றது என்பதை எடுத்தியம்பும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.*

***திறவுச்சொற்கள்:*** *பேடி, திருநங்கையர், கழல், கயல், காப்பியம்*

## முன்னுரை

ஆணைப் போன்ற, பெண்ணைப் போன்ற இயற்கையான பிறப்பு தான் திருநங்கையர். ஆணினத்திற்கும் பெண்ணினத்திற்கும் அடுத்ததாக இருப்பதால் திருநங்கையர்களை மூன்றாம் பாலினமாகக் கருத வேண்டும். வாழ்வின் ஒட்டு மொத்த அவலங்களும், வலிகளும் நிறைந்தது தான் இவர்கள் வாழ்க்கை. திருநங்கையரின் வாழ்வு வேதனைகளும் துயரங்களும் நிறைந்த போராட்டமான வாழ்வாகும். திருநங்கையரைக் குறித்த இலக்கியப் பதிவுகள் தமிழில் சங்க இலக்கியங்களில் இருந்தே காணப்படுகின்றன. இலக்கியங்களிலும், நிகண்டுகளிலும், இலக்கணங்களிலும், காப்பியங்களிலும் திருநங்கையர் குறித்த விளக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

## சிலப்பதிகாரத்தில் திருநங்கையர்கள்

சிலப்பதிகார கடல் ஆடுகாதையில் ஆடலில் வல்ல மாதவி தாளமுறை கெடாமல், தாளகதியுடன் கொடுகொட்டி ஆட்டம் முதற்கொண்டு பதினொருவகை ஆடல்களை நிகழ்த்திக் காட்டுகின்றாள். அதில் ஒருவகை ஆடலாக "பேடியாடல்" அமைகின்றது. ஆண் தன்மையை இழந்து பெண்தன்மை பெற்றக் கோலத்துடன் மன்மதன் ஆடிய பேடிக்கூத்தை மாதவி அரங்கில் நிகழ்த்திக் காட்டுகின்றாள்.

> **"ஆண்தன்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்**
> **காமன் ஆடிய பேடி ஆடலும்"[1]**
> **(சிலம்பு 56-57)**

திருநங்கையர் ஆண்மை திரிந்த பெண்பால் உணர்வு மிகுந்தவர்கள் என்னும் குறிப்பை மேற்கூறிய பாடல் அடிகளின் மூலம் இளங்கோ அடிகள் எடுத்துரைக்கின்றார்.

கண்ணகி மதுரையை எரித்தழித்த பிறகு அவள் பின்புறம் முன்னர் நடந்த முற்பிறவிக் கதையைச் சொல்லும் தெய்வம் மதுராபதி ஆகும். பாண்டிய மன்னர்களின் குலத் தெய்வமாகப் போற்றப்படும் சிறப்புடைத்தது இத்தெய்வம். இருபால் தன்மை கொண்ட மதுரை மாதெய்வம் அரவாணியாக இருப்பதை,

**"வல மருங்கு பொன்நிறம் புரையும் மேனியள்
இடக்கை பொலம்புந் தாமரை ஏந்தினும்
வலக்கை அம்சுடர்க் கொடுவாள் பிடித்தோள்
வலக்கால் புனைகழல் கட்டினும் இடக்கால்
தனிச்சிலம்பு அரற்றும் தகைமையள் பனித்துறைக்
கொற்கைக் கொண்கன் குமரித்துறைவன்
பொற்கோட்டு வரம்பன் பொதியில் பொருப்பன்
குலமுதல் கிழத்தி"[2]**

**(சிலம்பு 6-13)**

வலப்பாகம் பொன்னிறமாக விளங்கும் மேனியள். இடக்கையிலே பொன்னிறமான மலர்ந்த தாமரை மலரை ஏந்தியிருப்பினும், வலக்கையிலே மழுப்படையினையும் ஏந்தியிருப்பவள். வலக்காலிலே தொழிற்பாடுடைய வீரக்கழலைக் கட்டினாலும், இடக்காலிலே ஒற்றைச்சிலம்பு ஒலிமுழங்கும் தன்மையினை உடையவளாகக் காட்சி தருகின்றது. மதுராபதி தெய்வம் இருபால் தோற்றம் உடையதால் இடப்பக்கம் பெண்மை அணிகலன்கள் அணிந்த உருவுடன் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

சேரன் செங்குட்டுவன் பத்தினி தெய்வம் கண்ணகிக்குக் கல் எடுக்கவும், தமிழ் மக்களின் மானத்தையும், வீரத்தையும் நிலைநாட்டிடவும், வட திசை நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று, கனகவிசய மன்னர்களைத் தோற்கடித்து, இமயத்தில் கல்லெடுத்து, கங்கை ஆற்றில் நீர்ப்படை செய்து தென்திசை நோக்கித் திரும்புகின்றான். போர்க்களத்தில் தவ வேடம் பூண்டு தப்பியோடிய அரசர்களையும், கருத்த கூந்தலும், செவ்வரி படர்ந்த பெரிய கெண்டைமீன் கண்களும், வெண்சங்கு தோடணிந்தவர்களும், வெள்ளைப்பற்களும், சிவந்த வாயும், கைவளை அணிந்த கைகளும், அசையும் மூங்கில் போல் தோளும், அழகிய இளமார்பும், மின்னல் இடையும், பாடகம் என்னும் காலணி அணிந்த ஆரிய பேடிகளையும் கைது செய்து சேரனின் வீரம் குறித்துச் சோழ, பாண்டிய மன்னர்கள் அறிந்திட அனுப்புகிறான்.

**"சுருளிடு தாடி மருள்படு பூங்குழல்
அரிபரந்து ஒழுகிய செழுங்கயல் நெடுங்கண்
விரிவெண் தோட்டு வெண்ணகைத் துவர்வாய்ச்
சுடக வரிவளை ஆடமைப் பணைத்தோள்
வளரிள வனமுலை தளரியல் மின்னிடை
பாடகச் சீறடி ஆரியப் பேடியோடு"[3]**

**(சிலம்பு 181-186)**

என்பதன் மூலம் வட நாட்டைச் சேர்ந்த திருநங்கையர்கள் குறித்தும், அவர்கள் போர்களச் செயல்களில் ஈடுபட்ட பாங்கும் அறியப்படுகின்றது. இளங்கோ அடிகள் மேற்கண்ட பாடலடிகளில் மட்டுமே "பேடி" என்றழைக்கப்படும் திருநங்கையரின் உடற்தோற்றம் குறித்து விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

வஞ்சிக்காண்டம் நடுகற்காதையில் செங்குட்டுவனின் மனைவியும், அரசியுமான வேண்மாள், வெண்ணிலா காணுவதற்கு நிலாமுற்றம் வருகின்றாள். ஒளிவீசும் வளையல் அணிந்த பணிப்பெண்கள் மங்கல விளக்கை ஏந்தி வாழ்த்துகின்றனர். ஒரு பக்கம் மத்தள ஒலியும், யாழிசையும், பண்ணமைத்துப் பாடும் பாடல் முழக்கமும் மிகுந்திருக்கின்றன. கத்தூரிக் குழம்பையும், தொய்யில் எழுதும் வெண்சந்தனத்தையும் கூனரும், குள்ளரும் ஏந்தி நிற்கின்றனர். அப்போது பெண்ணைப் போன்ற அழகுடைய பேடிகள் (திருநங்கையர்) சுண்ணப் பொடிகளையும், வாசமலர் மாலைகளையும் ஏந்தி நிற்கின்றனர்.

**"மான்மதச் சாந்தும் வரி வெண் சாந்தும்
கூனும் குறளும் கொண்டன ஒரு சார்
வண்ணமும் சுண்ணமும் மலர் பும் பிணையலும்
வெண் அணிப் பேடியர் ஏந்தினர் ஒரு சார்"[4]**

**(சிலம்பு 57-60)**

என்ற பாடல் வரிகளின் மூலம் பேடிகள் என்றழைக்கப்படும் திருநங்கை யர் அரண்மனை அந்தப்புரங்களில் அரசியர்களுக்கு பணி விடைகள் செய்யும் சேடிப்பெண்களாக இருந்த வரலாறும் தெரியவருகின்றது.

**மணிமேகலையில் திருநங்கையர்**

மணிமேகலை தனது தாய், தந்தைக்கு ஏற்பட்ட துயர் கேட்டுக் கண்ணீர் வடிக்கின்றாள். அவளுக்கு மாதவி ஆறுதல் கூறுகின்றாள். மணிமேகலையின் மதி போல முகத்தில் வரும் உகுநீர் கண்டால் காமன் தனது படையினை எறிந்துவிட்டு நடுங்குவான். மணிமேகலையின் அழகைக் கண்டால் ஆடவர்கள் அவளைவிட்டு நீங்கிச் செல்லார். அப்படி அவளைவிட்டு நீங்கிச் செல்பவர்கள் பேடியர் ஆவார்கள் என்று சீத்தலைச்சாத்தனார் உரைக்கின்றார்.

**"மணிமேகலை கலைதன் மதிமுகந் தன்னுள்
அணிதிகழ் நீலத் தாய் மலரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன னாயிற்
படையிட்டு நடுங்குங் காமன் பாவையை
ஆடவர் கண்டால் அகறலு முண்டோ
பேடிய றன்றோ பெற்றியின் நின்றிடின்"[5]**

**(மலர்.புக்.காதை 20-25)**

என்ற பாடலடிகளின் மூலம் மணிமேகலையின் அழகு கண்டு நீங்கிச் செல்லும் ஆடவர்கள் இயற்கை திரிந்த பேடியர்கள் என்று இகழ்ந்து கூறுகின்றார்.

புகார் நகரத்தில் நிலமளந்த நெடுமாலின் மகனாகிய காமன் ஆடிய பேடிக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது. இப்பேடிக்கூத்தில் பேடி உருவம் தாங்கியவர்களின் வருணனை பின்வரும் பாடலடிகளில் கூறப்படுகின்றது.

**"சுரியற் றாடி மருள்படு புங்குழல்
பவளச் செவ்வாய்த் தவள வாள்நகை
ஒள்ளரி நெடுங்கண் வெள்ளரிவெண் தோட்டுக்**

**கருங்கொடிப் புகுவது மருங்குவளை பிறைநுதல்
காந்தளஞ் செங்கை ஏந்திள வனமுலை
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
இகந்த வட்டுடை எழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணில மளந்தோன் மகன் முன்னாடிய
பேடிக்கோலத்துப் பேடுகாண் குநரும்"[6]**

**(மலர்.புக்.காதை 116-125)**

சுருண்ட தாடியும், இருண்ட அழகிய கூந்தலும், பவளம் போன்ற சிவந்த வாயும், வெண்மை மிக்க ஒள்ளிய பற்களும், ஒளிபொருந்திய அரிபடர்ந்த பெரிய கண்களும், வெள்ளிய சங்கினாற் செய்த காதணியும், கரிதாய் வளைந்த புருவத்தின் பக்கலில் வளைந்துள்ள பிறை போன்ற நெற்றியும், காந்தள் மலர் போலுஞ் சிவந்த கையும், ஏந்திய அழகிய இளகொங்கைகளும், பெரிய அல்குலும், அழகிய நுண்ணிய இடையும், முழந்தாளளவாக உடுக்கப்படும் உடையும், தோள் முதலியவற்றில் எழுதப்பட்ட பத்திக் கீற்றும் உடையவள் என்று பேடியர்களின் உருவ அமைப்பை மணிமேகலை எடுத்து உரைக்கின்றது.

**சீவகசிந்தாமணியில் திருநங்கையர்**

திருத்தக்கதேவரால் இயற்றப்பெற்ற சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் காந்தருவதத்தையார் இலம்பகத்தில் திருநங்கையர் குறித்த பதிவுகள் உள்ளன. யாழிசையில் வல்ல காந்தருவதத்தை என்னும் வித்தியாதர மங்கைக்கு உள்ளத் தோழியாக விளங்குவது வீணாபதி என்னும் திருநங்கை. சீவகன் காந்தருவத்தை மீது காதல் கொள்வதற்கு, அக்காதலின் பொருட்டுத் தூது செல்லும் பணியை மேற்கொள்வதும் வீணாபதியாகும். வீணாபதியைக் காந்தருவதத்தையின் உற்றத் தோழியாகத் திருத்தக்கதேவர் படைத்துள்ள நுட்பம் போற்றுதற்குரியதாகும். வீணாபதியின் அழகையும் பிற மன்னர்கள் அவள் தோற்றம் குறித்துச் சுட்டும் மொழிகளையும் பின்வருமாறு திருத்தக்கதேவர் தெரிவிக்கின்றார்.

**"தளையவிழ் கோதைபாடித் தானமர்ந்திருப்பத் தோழி
விளைமதுக் கண்ணிவீணா பதியெனும்பேடி வேற்கண்
இளையவர் பாடவீர ரெழால்வகை தொடங்க லன்றேல்
வளையவ ளெழாலின் மைந்தர் பாடுக வல்லையென்றாள்"[7]**

**(சீவக.651)**

*முறுக்கவிழ்ந்த பூமாலை அணிந்த காந்தருவதத்தை அவை வணக்கம் பாடி மண்டபத்தின் கண்ணே வீற்றிருக்க, அவள் தோழியாக தேன்வழியும் மலர்க்கண்ணி அணிந்த வீணாபதியென்னும் பேடி, வேற்கண் உடைய தத்தை பாட அதற்கேற்றபடி வீரர்கள் யாழிசை மீட்டத் தொடங்குக என்றும், அது முடியாவிட்டால் தத்தையினைப் போல் விரைந்தாவது பாடுக என்றாள்.*

*பிற மன்னர்களோடு யாழிசையில் போட்டியிடும்போது மன்னர்களுக்கு சவால் விடுத்து வீணாபதி இவ்விதம் கூறவும், மன்னர்கள் வீணாபதியின் உடல் அழகு குறித்து வியப்பாக பார்க்கும் காட்சிகள் கீழ்க்காணும் பாடலடிகள் விளக்குகின்றன.*

**"வேயே திரண்மென்றோள் வில்லே கொரும்புருவம்**
**வாயே வளர்பவள மாந்தளிரே மாமேனி**
**நோயே முலை சுமப்ப தென்றார்க் கருகிருந்தார்**
**ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றார்**
**எரிமணிப்புண் மேகலையாள் பேடியோ வென்றார்"[8]**

**(சீவக.652)**

*மூங்கிலோ இவளது திரண்ட தோள்கள்! வளைந்த வில்லோ கொல்லும் புருவம்! வாயென்ன வளமிக்க பவளத்துண்டோ! பட்டு மாந்தளிரோ மெல்லுடலம்! இவளுக்கு முலை சுமத்தல் நோயோ என்று வினவவும், அருகிருந்தோரும் முலை காணாமையால் இவள் என்ன பேடியோ என்று ஐயம் உற்றார். இன்னும் சிலர் ஒளிமணிப் பூண் இழை அணிந்து வந்த தத்தையுடன் வந்தாள் ஒரு பேடி என்றனர், அவள் இவள் தானோ என்றனர்.*

*அவையில் உள்ளோரின் தன் உடல் அழகு குறித்த வினாக்கண்களுக்கு, வியப்பூட்டும் வகையில் வீணாபதி பதில் கூறுவதை,*

**"பலிகொண்டு பேராத பாசமிவள் கண்**
**ஒலிகொண்டு யிருண்ணுங் கூற்றமென்று எல்லே**
**கலிகொண்டு தேவர் முலைகரந்து வைத்தார்**
**இலைகொண்ட புணின் ரென்றெழினி சேர்ந்தாள்**
**இலங்குபொற் கிண்கிணியா ணக்கெழினி சேர்ந்தாள்"[9]**

**(சீவக.653)**

உயிரைக் கொல்லுகின்ற தன்மை நீங்காத காலபாசம் இவள் கண்கள்! இன்னும் தழைத்துப்பெருகி உயிரைக் கொள்ளை கொள்ளும் கூற்றம் என்று கலங்கியல்லவா பிரமன் என் மார்பைக் கண்ணுக்குத் தோன்றாதபடி மறைத்து வைத்தான். இலை வடிவுடைய மணிஇழைகள் அணிந்தவரே என்று தன் உடல் அழகு குறித்த மன்னர்களின் வியப்பிற்கு இவ்வாறு பதிலுரைத்தாள்.

### நீலகேசியில் திருநங்கையர்

சமணக் காப்பியமான நீலகேசியில் அலிகள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருநங்கையராகப் பிறந்தவர்கள் நரக உலகிற்கு சென்று துன்பப்படுவதாக நீலகேசி சுட்டுகின்றது. கீழிலிருந்து மேலாக நிரலே, இருளிருள், இருள், புகை, சேறு, மணல், பரல், மணி என்று ஏழு நரகங்கள் ஒவ்வொன்றும் ஏழாகப் பிரியும். இந்நரக உலகில் ஏழாம் நரகத்தில் பிறந்து மீளுவதற்கு வாய்ப்பு இல்லாதவர்களைக் கூறும்போது அலிகளையும் நீலகேசி குறிப்பிடுகின்றது.

**"ஏழாம் இவை விரித்தொண்பத்து நான்கு நூறாயிரமாம்**
**வோழா மவற்றப் புரையின் விகற்பமும் பொற்றொடியும்**
**கீழா அலிகள் முழுச்செவி கிண்ணர்க ளெண்ணிகந்த**
**ஏழாம் பிறப்பு முவ்வாதாமல் லாருரு வொப்பினரே"[10]**

**(நீலகேசி - 76)**

என்ற தவக்கோட்பாடு இல்லாதவர்களும், கண்களும், முழுச்செவியும் அற்றவர்களும், எண்ணற்ற பிறப்பும், உருவமும் பொருந்தி

நரக உலகில் உழன்று வருபவர்களாக நீலகேசி சுட்டுகின்றது. திருநங்கையர்களுக்கு நரகப் பிறப்பினை நீலகேசி காப்பியம் அளிக்கின்றது.

எதற்கும் பயனற்ற, கோழை, வீரமில்லாத நபர்களைச் சித்தரிக்கவே பேடி என்ற சொல்லை பயன்படுத்தி உள்ளனர். இந்த நிலை தான் நீலகேசியிலும் பிரதிபலிக்கிறது. எனினும் அவர்களின் மன வேதனையை, உணர்வுகளைப் புரிந்து பதிவு செய்த காப்பியமாகவே நீலகேசி திகழ்கிறது.

**"பேடி வேத னைபெரி**
**தோடி யுரு மாதலாற்**
**சேடி யாடு வன்மையிற்**
**கூடி யாவ தில்லையே"[11]**

**(நீலகேசி - 96)**

இந்நரகத்தில் வீழுமுயிர்கள் பெண்தன்மையாதல், ஆண் தன்மையாதல் உடையன அல்ல. ஆதலால் இவர்கள் தம்முட் காதலாற் கூடிக் களிப்படைவது மில்லை. இவர்கள்பால் பேடித்தன்மையாலுண்டாகும் துன்பம் பெரிதும் சென்றுபரவாநிற்கும். மேலும் திருநங்கையரால் பிள்ளை பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையை நீலகேசி கீழ்க்காணும் பாடலடி விளக்குகின்றது.

**"பேடி சாரினும் பிள்ளை பெறாமையை"** என்ற வரிகளின் மூலம் திருநங்கையரால் ஒரு போதும் பிள்ளை பெற்றுக் கொள்ள இயலாது என்று நீலகேசி கூறுகின்றது.

## தொகுப்புரை

ஈராயிரம் ஆண்டு தமிழ் இலக்கியங்களில் திருநங்கையரைக் குறித்தும், அவர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் குறித்தும், திருநங்கையரின் உடல் அமைப்பு குறித்தும், அவர்களின் பிறப்பு குறித்தும் காப்பியங்கள் தெளிவாகப் பதிவு செய்துள்ளது. சிலப்பதிகாரத்தில் மதுராபதி தெய்வம் இருபால் தன்மை கொண்டதாகவும், மணிமேகலையில் பேடி உருவம் புண்டவர்களின் வருணனையும், சீவக சிந்தாமணியில் காந்தருவதத்தையின் தோழியாக "வீணாபதி" என்னும் அரவாணி படைக்கப்பட்டு இருப்பதும், நீலகேசியில் திருநங்கையருக்கு நரகப்பிறப்பு உண்டென்பதை காப்பியங்கள் எடுத்துரைக்கின்றது.

## சான்றெண் விளக்கம்

1. புலியூர்க்கேசிகன் (பதி.), சிலப்பதிகாரம், பாரிநிலையம், சென்னை, மறுபதிப்பு, 2006, ப.87
2. மேலது, ப.306
3. மேலது, ப.385
4. மேலது, ப.396
5. புலியூர்க்கேசிகன் (பதி.), மணிமேகலை, பாரிநிலையம், சென்னை, பதின் மூன்றாம் பதிப்பு, 2005, ப.40
6. மேலது, ப.48
7. ஞா. மாணிக்கவாசகன் (உரை.), சீவகசிந்தாமணி மூலமும் உரையும், உமா பதிப்பகம், 2007, ப.312
8. மேலது, ப.312
9. மேலது, ப.313
10. எஸ். கௌமாரீஸ்வரி (பதி.), நீலகேசி மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2013, ப.29
11. மேலது, ப.35

## துணை நூற்பட்டியல்

1. கௌமாரீஸ்வரி (பதி.). 2013. *நீலகேசி மூலமும் உரையும்*, சென்னை, சாரதா பதிப்பகம்.
2. புலியூர்க்கேசிகன் (பதி.). 2006. *சிலப்பதிகாரம்*, சென்னை, பாரிநிலையம்
3. புலியூர்க்கேசிகன் (பதி.), 2005. *மணிமேகலை*, சென்னை, பாரிநிலையம்.
4. மாணிக்கவாசகன் ஞா. (உரை.). 2007. *சீவகசிந்தாமணி மூலமும் உரையும்*, (முதல் பாகம்), சென்னை, உமா பதிப்பகம்